DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.81/2024**
Deposition of Witness for – Prosecution : PW1
Defence:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெயலட்சுமி | | : |
| க/பெ | : டில்லிபாபு | மதம் | : |
| கிராமம் | : அம்பத்தூர் | தொழில் | : Beautician |
| வட்டம் | : சென்னை | வயது | : 43/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 19.01.2026**

<u>குறுக்கு விசாரணை</u>: **PW1**

எதிரி நான் வசிக்கும் பகுதியின் வசித்து வருகிறார் அதன் மூலம் சுமார் 12 ஆண்டுகளாக தெரியும். எனக்கு மாத வருமானம் ரூ.50,000 முதல் ரூ.70,000/- வரை சம்பாதித்து வருகிறேன். எதிரி என்னிடம் வந்து கடன் கேட்பதற்கு அவசியம் என்ன என்றால் அவருக்கு திருமணம் முடிவு செய்யப்பட்டது அதற்காக வாங்கினார். எங்கு வைத்து யார் முன்னிலையில் பணம் கொடுத்தேன் என்றால் என் வீட்டில் வைத்து பணம் கொடுத்தேன். நானும் எதிரியும் மட்டும் தான் இருந்தோம் வேறு யாரும் இல்லை. 02.08.2023 ல் பணத்தை திருப்பி தருவதாக எதிரி கூறியிருந்தார். எந்த தேதியில் பணம் கேட்டார் நான் எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்றால் நான் பணம் கொடுத்தது 02 ஆம் தேதி 07 ம் மாதம் ஆகும். அத்தாட்சிக்கு ஆவணம் ஏதேனும் எழுதி வாங்கினேனா என்றால் காசோலை மற்றும் எதிரியின் ஆதார் அட்டை நகல் கொடுத்தார். இந்த பணபரிமாற்றம் தவிர வேறு கொடுக்கல் வாங்கல் எங்களிடையே உள்ளதா என்றால் இல்லை. வழக்கு காசோலையை வங்கியில் செலுத்துமாறு எதிரி அறிவுறுத்தினாரா என்றால்

இல்லை. நேரில் பார்த்து எதிரியை கேட்டதற்கு வங்கியில் செலுத்துமாறு கூறினார். மேற்படி விவரத்தை எனது புகார் மனு, பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேனா என்றால் என் வழக்கறிஞரிடம் தெரிவித்தேன். காசோலை வங்கியில் செலுத்தி போதிய பணமில்லை என்று திருப்பப்பட்ட பின்பு என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் எனது வழக்கறிஞரிடம் தெரிவித்து முறையே நடவடிக்கை எடுத்தேன். சட்ட அறிவிப்பை எதிரி வாங்கினாரா என்றால் எதிரியின் வீட்டில் யார் வாங்கினார் என்று தெரியாது ஆனால் வழக்கறிஞர் அறிவிப்பு சார்வு செய்யப்பட்டது. எதிரியின் வீட்டு கதவு மூடப்பட்ட காரணத்தினால் வழக்கறிஞர் அறிவிப்பு திருப்பப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது என்றால் சரிதான். அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு திரும்ப பெற்றேனா என்றால் அது வழக்கறிஞருக்கு தான் தெரியும் எனக்கு தெரியாது. வழக்கறிஞர் அறிவிப்பு திரும்ப பெற்றதற்கான அஞ்சல் உறை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது குறித்து தெரியாது. பின்பு எதிரியை சந்தித்து இதை குறித்து கேட்டேனா என்றால் இல்லை. எதிரியை தவிர பேறு யாருக்கேனும் கடனாக பணம் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

எதிர் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணைக்கு காலஅவகாசம் கோரியதின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K